செ.வெ.எண்: 154 நாள்: 20.02.2020

**புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆவின் மூலம் நாளொன்றுக்கு 55,000 லிட்டர் பால் கொள்முதல்.**

**ஒவ்வொரு மாதமும் பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.5.5 கோடி வழங்கப்படுகிறது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

---

புதுக்கோட்டை நகராட்சி, திருக்கோகர்ணம் கல்யாணராமபுரத்தில் அமைந்துள்ள மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய பால் பண்ணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (20.02.2020) நேரில் பார்வையிட்டார். இந்நிகழ்வின் போது மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தலைவர் பழனியாண்டி உடனிருந்தார். இதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பால்வளத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மேலும் தமிழக அளவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆவின் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் லாபகரமாக இயங்கி வருகிறது. ஆவின் நிறுவனத்தின் மூலம் தரமான பால், தயிர், பால்கோவா, வெண்ணெய், நெய் போன்ற பல்வேறு பால் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆவின் பால் பண்ணையினை இன்றைய தினம் நேரில் பார்வையிடப்பட்டது.

2014 ஆம் ஆண்டு முதல் இப்பண்ணையின் மூலம் பால் கொள்முதல் நாளொன்றுக்கு 19,000 லிட்டர் எனத் தொடங்கி தற்பொழுது மாவட்டம் முழுவதும் 317 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் சராசரியாக நாளொன்றுக்கு 55,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

2018-19ல் 22,428 பால் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் இருந்த நிலையில் தற்பொழுது 2019-20ல் 23,068 பால் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் உள்ளனர் . இவர்கள் உற்பத்தி செய்யும் மொத்த பாலையும் கொள்முதல் செய்து பாலுக்கான பணம் நிலுவையின்றி 10 நாட்களுக்கு ஒருமுறை வழங்கப்படுகிறது. அந்த

வகையில் ஒவ்வொரு மாதமும் பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.5.5 கோடி வழங்குப்பட்டு வருகிறது. இதுதவிர கிடைக்கப்பபெறும் லாபத்தில் ரூ.53 லட்சம் பங்குத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பால் உற்பத்தியாளர்களுக்கு கால்நடை தீவனம் கிலோ ஒன்றுக்கு ரூ.3.20க்கும், தாது உப்பு கலவை ரூ.25க்கும், பசும் தீவனம் ரூ.2.50க்கும் மானிய விலையில் வழங்கப்படுகிறது. மாவட்டத்தில் உள்ள பால் நுகர்வோரின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் நாளொன்றுக்கு 15,500 லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. உள்கட்டமைப்பை மேம்படுத்தும் வகையில் நபார்டு திட்டத்தின் கீழ் 17 பணிகள் ரூ.4.40 கோடி மதிப்பீட்டில் நடைபெற்ற வருகிறது.

ஆவின் மூலம் உற்பத்தி செய்யப்படும் தரமான நெய், வெண்ணெய், ஐஸ்கிரீம், பாதாம்பவுடர், பால்பவுடர், மைசூர்பா மற்றும் நறுமணப் பால் ஆகிய பல்வேறு பொருட்களை பொது மக்கள் வாங்கி பயன்படுத்துவதன் மூலம் கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது ஆவின் பொது மேலாளர் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**